## கடன் அளிப்போருக்கான நேர்மையான நடைமுறைகளுக்கான நெறி பற்றிய வழிகாட்டுதல்கள்

**DBOD.Leg. No. BC. 104/09.07.007/2002-03** **மே 5, 2003**

அனைத்து அட்டவணையில் உள்ள வணிக வங்கிகளுக்கும்
இந்தியாவில் உள்ள அனைத்து நிதி நிறுவனங்களுக்கும்
(பிராந்திய கிராம வங்கிகள் மற்றும் வட்டார வங்கிகள் நீங்கலாக)

அன்புடையீர்,

## கடன் அளிப்போருக்கான நேர்மையான நடைமுறைகளுக்கான நெறி பற்றிய வழிகாட்டுதல்கள்

இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட கடன்கொடுப்போருக்கான பொறுப்பு சட்டங்களுக்கான செயல் குழுவின் பரிந்துரைகளின் அடிப் படையில் அரசின் ஆலோசனையோடு நாங்கள் பரிசீலத்தோம். அதில் கடன் கொடுப் பாளர்களுக்கான நாணயமான நடை முறைகளுக்கான நெறியை தேர்ந்தெடுக்கப் பட்ட வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் அறிமுகப் படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தோம். வழிகாட்டு நெறிமுறைகள் இறுதியாக்கப்பட்டு வங்கிகளும்/ அனைத்து இந்திய நிதி நிறுவனங்களுக்கும் இயக்குநர்கள் குழுமத்தால் முறையாக அங்கீகரிக்கப் பட்ட நாணயமான நடை முறைகளை வகுத்து பரந்த வழிகாட்டுநெறிகளை ஏற்று பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

### 2. வழிகாட்டுநெறிகள்

i. <u>கடன்களுக்கான விண்ணப்பங்களும் அவற்றை பல கட்டமாக பரிசீலித்தலும்</u>

a. ரூ. 2 லட்சத்திற்கு மேற்பட்ட முன்னுரிமைப் பகுதி கடன்களுக்கு, கடன்விண்ணப்ப படிவங்கள் விரிவானதாக இருக்க வேண்டும். பல கட்ட பரிசீலிப்பிற்கு ஏதேனும் கட்டணம் இருந்தால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும்போது அக்கட்டணங்கள் திருப்பி அளிக்கப்படுவது மற்றும் உள்ள கட்டணங்கள் ஆகியவற்றை பற்றிய விவரங்களை உள்ளடக்கி இருக்க வேண்டும். கெடுவிற்குமுன் கடனடைக்கும் வழிகள் அல்லது வேறு ஏதேனும் விவரங்கள் கடனாளியின் நலனை பாதிக்கிறதா என்பது பற்றியும் விவரங்கள் இருந்தால் மற்ற வங்கிகளோடு ஒரு அர்த்தமுள்ள ஒப்பீட்டை செய்து ஒரு விவரமான முடிவை கடனாளி எடுக்கமுடியும்.

b. வங்கிகளும் நிதி நிறுவனங்களும் தாங்கள் பெறும் நியாயமான கால கட்டத்திற்குள் சரிபார்த்திட வேண்டும். ரூ.2 லட்சம் வரையிலான கடன் விண்ணப்பங்களை தீர்வு செய்திடும் காலவரையறையை அவ் விண்ணப்பங்களைப்

பெறும்போது வழங்கப்படும் ஒப்புதல் சீட்டுகளில் குறிப்பிட வேண்டும்.

c. வங்கிகளும் நிதி நிறுவனங்களும் கடன் விண்ணப்பங்களை நியாயமான காலகட்டத்திற்குள் சரிபார்த்திட வேண்டும். மேலும் ஏதேனும் விவரங்கள் ஆவணங்கள் தேவைப்படுமானால் கடன் பெறுவோரிடம் உடனே தெரிவிக்க வேண்டும்.

d. ரூ.2 லட்சத்திற்குள் கடன் கேட்கும் சிறு கடனாளிகள் விஷயத்தில கடன் அளிப்போர் எதனால் கடன் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன என்பதற்கான முக்கிய காரண/காரணங்கள் வங்கியின் நோக்கில் குறிப்பிட்ட காலத்திற்குள் எழுத்து மூலமாக அளித்திட வேண்டும்.

ii. <u>கடன் மதிப்பாய்வு விதிகளும் / நியமங்கள்</u>

a) கடனாளிகளின் கடன் விண்ணப்பங்களை சரியான முறையில் மதிப்பீடு செய்வதை கடன் அளிப்போர் உறுதி செய்திட வேண்டும். கடனாளியின் நம்பகத்தன்மையின் சான்றாணைக்கு மாற்றாக ஈடு செய்வதற்காக முன்னரே சேர்க்கப்பட்ட மிகைபகுதியையும் பாதுகாப்புவரை முறைகளையும் உபயோகிக் கக் கூடாது.

b) கடன் அளிப்போர் கடன் வரம்பையும் அதற்கு உண்டான விதிகளையும் நியமங்களையும் கடன் பெறுவோரிடம் தெரிவிக்க வேண்டும். அதோடு இத்தகைய விதிகளையும் நியமங்களையும் கடன் பெறுவோர் தங்களுடைய முழு அறிவுடன் ஒப்புக் கொண்டதை பதிவுசெய்திட வேண்டும்.

c) வங்கிகளும் நிதி நிறுவனங்களும் அளிக்கும் கடன் வசதிகளுக்கான விதிகளும் நியமங்களும் மற்றும் எச்சரிக்கைகளும் கடன் அளிக்கும் நிறுவனம் மற்றும் கடன் பெறுவோரிடையே பேச்சு வார்த்தைக்குபின் முடிவு செய்யப்பட்டு அது எழுத்தில் வடிக்கப்பட்டு அதற்குண்டான அதிகாரியால் சான்றிதழ் அளிக்கப்பட வேண்டும். கடன் ஒப்பந்தத்தின் பிரதியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இணைப்புக்களின் பிரதிகளும் கடன் பெறுவோருக்கு அளிக்கப்பட வேண்டும்

d) முடிந்தவரை கடன் ஒப்பந்தத்தில் கடன் அளிக்கும் வசதிகள் கடன் அளிப்போரின் விருப்பத்தையே முழுதும் சார்ந்துள்ளது என்பதை முன்வரை செய்யவேண்டும். இவைகள் அவ் வசதிகளை அனுமதிப்பதோ அல்லது மறுப்பதையோ உள்ளடக்கியதாகும். அதாவது கொடுக்கப்பட்ட வரம்பிற்குமேல் எடுப்பது கடன் வழங்கலின்போது குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட நோக்கத்திற்கு மாறாக வழங்கப்படும் காசோலைகளை மதிப்பது, செயல்படா சொத்துக்கள் என்ற

பிரிவில் கடன் கணக்கிலிருந்து எடுப்பதை மறுப்பது அல்லது இசைவாணையின் நியதிகளோடு ஒத்துப் போகாமலிருத்தல் குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட இன்னொரு விஷயம் என்னவென்றால் வர்த்தகத்தின் வளர்ச்சி காரணமாக கடன் பெறுவோருக்கு மேன்மேலும் தேவைகள் ஏற்பட்டால் சரியான முறையில் கடன் வரம்பை பரிசீலிக்காமல் அதனை சந்திக்க வேண்டிய நிர்பந்தம் கடன் தருவோருக்கு இல்லை

e) கூட்டிணைப்பு ஏற்பாட்டில் கடன் வழங்கும் விஷயத்தில் பங்கேற்கும் கடன் கொடுப்பவர்கள் சிலநடைமுறைகளை உருவாக்கிட வேண்டும். எதற்கெனில் கடன்கோரும் மனுக்களை குறித்த காலத்திற்குள் முடிந்தவரை மதிப்பீடு செய்து கடன் அளிக்கப்போகிறோமா இல்லையா என்பதை நியாயமான காலகட்டத்திற்குள் தெரிவிக்க வேண்டும்.

iii. <u>கடன் வினியோகத்தில் விதிகளிலும் நியமங்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள்</u>

கடன் அளிப்பதற்கான இசைவாணையை ஒட்டிய விதிகளுக்கும் நியமங்களுக்கும் உட்பட்டு கடன் வினியோகத்தை காலத்தோடு வழங்கிடுவதை கடன் அளிப்போர் உறுதி செய்திட வேண்டும். வட்டி விகிதம், சேவைக் கட்டணம் போன்றவைகளிலும் மற்றும் விதிகளிலும் நியமங்களிலும் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் கடன் அளிப்போர் அவற்றை உடனே தெரிவித்திட வேண்டும். வட்டி விகிதங்களிலும், சேவைக் கட்டணங்களிலும் ஏற்படும் மாற்றங்கள் வருங்காலத்திலிருந்து மட்டும் என்பதை கடன் கொடுப்போர் உறுதி செய்திட வேண்டும்.

iv. <u>கடன் அளிக்கப்பட்டபின் மேற்பார்வை</u>

a. கடன் அளித்தோரால் குறிப்பாக ரூ. 2 லட்சம் வரையிலான கடன்களுக்கு, கடன் அளிக்கப்பட்டபின் மேற்பார்வை செய்யப்படும். அது ஆக்கபூர்வமானதாகவும் கடன் பெற்றோர் சந்திக்ககூடிய கடன் அளிப்போர் சம்பந்தமான நியாயமான இடையூறுகளை கவனத்தில் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

b. கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி அப்படி எந்த கட்டாயமும் கடன் ஒப்பந்தத்தில் இல்லையென்றால் ஒரு நியாயமான காலகட்டத்திற்குள் கடன் அளிப்போர் கடன் பெறுவோருக்கு அறிவித்திட வேண்டும். எப்போது எனில் கீழ்க்கண்ட முடிவுகளை எடுக்கும்போது கடனைத் திரும்பக் கேட்கும்போது தவணையையோ அல்லது ஒப்பந்தத்தின் கீழான செயலையோ துரிதப்படுத்தும்போது மேலும்

பிணையங்கள் கேட்பது போன்ற சமயங்களில் ஆகும்.

c. கடன் பெற்றவர்களின்மேல் கடன் அளிப்பவர்களுக்கு ஏதேனும் பற்றுன்றுரிமை(Lien)யோ அல்லது வேறு ஏதேனும் வரவேண்டியதோ இருக்குமேயானால் அதற்கு சட்டப்பூர்வமாக உட்பட்டு கடன் தொகை திரும்பக் அளிக்கப்படும்போது கடன் அளித்தவர் அனைத்து பிணையங்களையும் விடுவித்துவிட வேண்டும். ஒருவேளை தரவேண்டியதில் தீர்வு செய்யப்பட வேண்டிய உரிமை நிறைவேற்றப்பட இருந்தால் கடன் பெறுவோர் தரவேண்டிய மீதமுள்ள பாகத்தைப் பற்றிய முழுவிவரங்களையும் அறிவித்திட வேண்டும். அதோடு கடன் அளிப்போர் தரவேண்டியது தீர்வடையும் வரை, எந்த ஆவணங்களின்கீழ் பிணையங்கள் வைத்துக் கொள்ளப்படும் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

v. <u>பொது</u>

a) கடன் அளிக்கும் ஆவணங்களில் உள்ள விதிகளையும் நியமங்களையும் தவிர்த்து, கடன் பெறுவோரின் விவகாரங்களில் தலையிடுவதை கடன் அளிப்போர் தவிர்க்க வேண்டும். (கடன் பெறுவோரால் முன்பு சொல்லப்படாத புது தகவல், கடன் அளிப்பவரின் கவனத்திற்கு வரும்சமயம் தவிர)

b) கடன் அளிப்போர் கடன் அளிக்கும் விஷயத்தில், பால், ஜாதி, மத அடிப்படையில் வேறுபடுத்தி பார்த்திடக்கூடாது. அதே சமயம், சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவினருக்கான கடன் தொடர்பான திட்டங்களில் கடன் அளிப்போர் பங்கு கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை.

c) கடன்களை வசூலிக்கும் விஷயத்தில் கடன் அளிப்போர் கடன் வாங்கியவர்களை நேரங்கெட்ட நேரத்தில் தொடர்ந்து நச்சரிப்பது, கடன்களை வசூலிப்பதற்கு குண்டர்களை ஏவுவது போன்ற அனாவசிய தொல்லைகளை கொடுக்கக்கூடாது.

d) கடன் பெற்றவரிடமிருந்தோ அல்லது ஏதேனும் வங்கி நிதிநிறுவனத்திடமிருந்தோ கடன் கணக்கை மாற்றித்தர வேண்டி கோரிக்கையை பெற்றால் அதற்கான ஒப்புதலையோ அல்லது ஏதேனும் மறுப்பு இருந்தாலோ கடன்கொடுத்தவர் கோரிக்கை பெற்ற தேதியிலிருந்து 21 நாட்களுக்குள் அதனை தெரிவித்து விடவேண்டும்.

**3**. மேலே சொன்னவைகளில் பத்தி 2ல் விவரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நேர்மையான நடை முறைகளுக்கான நெறி, 2003 ஆகஸ்ட் 1 க்குள் வருங்காலத்தில் அனைத்து கடன் அளிப்பு விவகாரங்களிலும் அமர்த்தப்படவேண்டும். வங்கிகளும் நிதிநிறுவனங்களும் நேர்மையான நடை முறைகளுக்கான நெறியை வகுப்பதில் முழு சுதந்திரம் அளிக்கப்

பட்டுள்ளது. அதே நேரத்தில் வழிகாட்டு நெறிகளின் செயற்பரப்பை விரிவுபடுத்தும்போது, அதன் அடிநாதமான மெய்ப்பொருள் தியாகம் செய்யப்பட்டு விடக்கூடாது. இதற்காக வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களின் குழுமங்கள் ஒரு சரியான கொள்கையை அளித்திட வேண்டும்.

4. இது விஷயமாக எழும் சச்சரவுகளை தீர்த்து வைக்க அமைப்பிற்குள்ளேயே குறை தீர்க்கும் மையம் ஒன்றை இயக்குநர்கள் குழுமம் ஏற்படுத்திட வேண்டும். இதுபோன்ற முறையில், கடன் கொடுக்கும் நிறுவனங்களின் அதிகாரிகளின் முடிவுகளால் உருவாகும் அனைத்து சச்சரவுகளையும் கேட்டு அடுத்த உயர் மட்ட அளவிலாவது தீர்த்து வைக்கப்பட வேண்டும். இயக்குநர்கள் குழுமம் நேர்மையான நடை முறைகளுக்கான நெறி கடைபிடிக்கப்படுவதைப் பற்றி அவ்வப்போது மறு ஆய்வு செய்யவேண்டும். பல்வேறு மட்டங்களில் உள்ள கட்டுப்பாட்டு அலுவலகங்களில் குறை தீர்க்கும் மையங்களின் செயல்பாட்டினையும் மறு ஆய்வு செய்யவேண்டும். அத்தகைய குழுமத்தால் நிர்ணயிக்கப்பட்ட இடைவெளியில் குழுமத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. நெறியை ஏற்றுக்கொள்வது தேவையான கடன் விண்ணப்ப படிவங்களை அச்சிட்டு அவற்றை வங்கிகளின் கட்டுப்பாட்டு அலுவலகங்கள் மற்றும் கிளைகளுக்கு விநியோகிப்பது போன்றவைகளை 2003 ஜுன் இறுதிக்குள் முடித்திட வேண்டும். வங்கிகளாலும் நிதிநிறுவனங்களாலும் கடைபிடிக்கப்படும் நேர்மையான நடை முறைகளுக்கான நெறி இணையதளத்தில் போடப்பட்டு பரந்த விளம்பரம் அளிக்கப்பட வேண்டும். ஒரு பிரதி ரிசர்வ் வங்கிக்கும் அனுப்பப்படவேண்டும்..

6. தயவுசெய்து பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

உங்கள் நம்பிக்கைக்குரிய

(M.R. ஸ்ரீனிவாசன்)
தலைமை பொது மேலாளர்